**நடுவர் நீதிமன்றம், பாப்பிரெட்டிபட்டி**
**முன்னிலை : திரு.ஐ.சம்பத்,B.A,, MSW., LLB.,**
**நீதித்துறை நடுவர் பாப்பிரெட்டிபட்டி**
**2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 05-ம் நாள் வெள்ளிக்கிழமை**

**STC.No.07/2026**
**C.N.R.No.TNDP130004522025**

அரசு காவல் உதவி ஆய்வாளர்,
கடத்தூர் காவல் நிலையம்,
குற்ற எண்: 154/2024 ...குற்றமுறையீட்டாளர்

**/எதிரி/**

A1.ஆதவன் த/பெ சந்திரசேகர்
A2.முத்தமிழ் த/பெ ராஜராம் ...எதிரிகள்

**வழக்கு விபரம்**

| | | |
|---|---|---|
| 1. | Name of the Court | Judicial Magistrate, Pappireddipatti |
| 2. | Name of the Judge | Thiru.I.Sambath,B.A.,MSW,LLB., |
| 3. | Date of Judgment | 05.06.2026 |
| 4. | Case Number along with CNR Number | STC.No.7/2026<br>C.N.R.No.TNDP130004522025 |
| 5. | Name of the parties of the case | Sub-Inspector of Police, Kadathur<br>Cr.No. 154/2024 |
| | | A1.Aathavan S/o Chandrasekar<br>A2. Muthamil S/o Rajaram |
| 6. | Date of Occurence | 15.06.2024 |
| 7. | Date of Complaint | 15.06.2024 |
| 8. | Date of arrest if any and remand | -- |
| 9. | Period of Remand of the Accused | -- |
| 10. | Date if release on bail | -- |
| 11. | Date of Final Report | 15.06.2024 |
| 12. | Date of Committal of the case to court of Sessions | -Nil- |
| 13. | Date of Questioning of the accused U/s.4(1)(a)TNP Act | 26.02.2026 |

| | | | | |
|---|---|---|---|---|
| 14. | Date of Examination in Chief and cross examination of the witnesses | Witnesses | Chief | Cross |
| | | PW1<br>PW2<br>PW3 | 08.05.2026<br>08.05.2026<br>03.06.2026 | 08.05.2026<br>08.05.2026<br>03.06.2026 |
| 15. | Date of filing of all miscellaneous petitions and their results including the results on Challenge before the Superior courts except routine petitions like petitions U/S. 355 BNSS | -Nil- | | |
| 16. | Date of Examination of the Accused U/s.351 BNSS | 04.06.2026 | | |
| 17. | Details of the abscondence of an accused and his appearance / production as the case may be | -Nil- | | |
| 18. | Grant of Stay by Superior Courts and the results there of | -Nil- | | |
| 19. | Date of Commencement of Trial | 08.05.2026 | | |
| 20. | Date of Closure of Trial | 03.06.2026 | | |
| 21. | Date of Sentence of Order | 05.06.2026 | | |
| 22. | Date of Service of Copy of Judgment to the Accused | 05.06.2026 | | |
| 23. | If any delay give Explanation | -Nil- | | |

இவ்வழக்கானது 03.01.2026 –ம் தேதி அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதி விசாரணைக்காக 05.06.2026–ம் தேதியன்று வந்தபோது குற்றமுறையீட்டாளர் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை–1 செல்வி. V.சண்முகபிரியா,பி.ஏ.,எம்.எல்., முன்னிலையிலும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் C.குமார் E.விவேகானந்தன் மற்றும் V.அரவிந்த்கிருஷ்ணா ஆகியோர்களின் முன்னிலையில் வழக்கு ஆவணங்கள் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்த பின்னரும் இருதரப்பு வாதுரைகள் கேட்டறிந்த பின்னரும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

1. கடந்த 15.06.2024 ம் தேதி 07.50 மணிக்கு கடத்தூர் காவல் நிலைய சரகம் அருகே இவ்வழக்கின் எதிரிகளாகிய A1. ஆதவன் மற்றும் A2. முத்தமிழ் என்பவர்கள் 180 ML அளவு கொண்ட 8-PM-14, 500 ML அளவு கொண்ட Old Monk 4, 375 ML Amrut Rum3,1000 ML அளவு கொண்ட Old Admiral-3, 750 ML அளவு கொண்ட IB-1 கர்நாடகா மாநிலத்தை சேர்ந்த மது பாட்டில்களை எவ்வித அரசு அனுமதியோ உரிமமோ பெறாமல் அரசு அனுமதியின்றி சில்லறையில் விற்பனை செய்ய வைத்திருந்த எதிரிகளின் செய்கையானது சட்டப்பிரிவு 4(1)(a) TNP Act ன் படி தண்டிக்கதக்க குற்றம் என்று கடத்தூர் காவல் உதவி ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இந்நீதிமன்றம் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்து STC.No.07/2026 என 03.01.2026-ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டவுடன் எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக அழைப்பாணை அனுப்பப்பட்டு எதிரிகள் இந்நீதிமன்றத்தில் அழைப்பாணையின் பேரில் ஆஜரானவுடன் அரசு தரப்பு ஆவணங்கள் மற்றும் நகல்கள் அனைத்தும் எதிரிகளுக்கு இலவசமாக BNSS பிரிவு 230ன் கீழ் வழங்கப்பட்டு குற்றச்சாட்டுகள் வனைவதற்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

3.எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டபின் வழக்கு ஆவணங்களை கவனத்துடன் பரீசிலனை செய்தபோது எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் வனைவதற்கு போதுமான முகாந்திரம் இருந்தபடியால் எதிரிகள் மீது தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் பிரிவு 4(1)(a) ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு குற்றங்களின் தன்மையை எதிரிகளுக்கு படித்து விளக்கி கூறியபோது எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்து அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க வேண்டும் என கோரியதால் வழக்கானது அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க ஒத்தி வைக்கப்பட்டது.

4. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா. 3 ஆகிய சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.த.சா.ஆ.1 மற்றும் அ.த.சா.ஆ.2 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. அரசு தரப்பு சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

## 5. அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்

**(i) அ.சா.1 மூக்கன் (இரண்டாம் நிலை காவலர்)** தனது சாட்சியத்தில் தான் தற்போது கம்பைநல்லூர் காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவாலராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 15.06.2024 ம் தேதி காலை 07.30 மணியளவில் தான் கடத்தூர் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது காவல் உதவி ஆய்வாளர் முகில்ராஜ் அவர்களது தலைமையில் தானும் தன்னுடன் முதல் நிலை காவலர் சாந்தமூர்த்தி ஆகியோருடன் காவல் உதவி ஆய்வாளர் கிடைத்த தகவலின்பேரில் மது விலக்கு குற்றம் சம்பந்தமாக கடத்தூர் to அரூர் செல்லும் சாலையில் மார்க்கமாக கடத்தூரிலிருந்து அரை கிலேமீட்டர் உள்ள ஜெயலட்சுமி பேன்சி ஸ்டோர் அருகில் கண்காணித்து கொண்டிருந்தபோது வழக்கின் எதிரிகளான ஆதவன், முத்தமிழ் ஆகியோர் சந்தேகப்படும்படி நின்றுக்கொண்டிருந்தார்கள் என்றும், அவர்களை சோதனை செய்தபோது அவர்கள் வைத்திருந்த பையில் 180 ML அளவு கொண்ட 8 PM – 14 பாட்டில்கள், Old Monk – 4 பாட்டில்கள், 175 ML Amret – 3 பாட்டில்கள், 1000 ML Old Admiral –3 பாட்டில்கள், 73 ML அளவு கொண்ட IB – 1 பாட்டில், கர்நாடகா மாநிலத்தை மதுபாட்டில்கள் இருந்தன என்றும், இது குறித்து காவல் உதவி ஆய்வாளர் எதிரிகளிடம் விசாரித்தபோது எதிரிகள் தங்களை கண்டவுடன் தப்பியோட முயன்றவரை போலிஸ் பார்டி உதவியுடன் சுற்றி வளைத்து பிடித்து விசாரித்தபோது அவர் அரசு மதுபானத்தை மொத்தமாக வாங்கி வந்து பொதுமக்களிடம் சில்லரையில் பாட்டில்களை அதிக விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததை ஒப்புக்கொண்டார் என்றும், எதிரிகளை காவல் உதவி ஆய்வாளர் அந்த இடத்திலேயே கைது செய்தார் என்றும், மேலும் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் தன்னுடன் வந்த முதல் நிலை காவலர் சாந்தமூர்த்தி முன்னிலையில் எதிரிகளிடம் இருந்து மேற்படி பாட்டில்களை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார் என்றும், கைப்பற்றுதல் மகஜரில் தானும் முதல்நிலை காவலர் அ.சாந்தமூர்த்தி அவர்களும் கையொப்பம் செய்தோம் என்றும், தன்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் கைப்பற்றபட்ட வழக்கு சொத்துக்களை காவல் உதவி ஆய்வாளர்

உயர் அதிகாரியின் உத்தரவின்பேரில் அந்த இடத்திலேயே கொட்டி அழித்தார் என்றும், பின்னர் எதிரிகளை நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்தார் என்றும், காவல் உதவி ஆய்வாளர் தன்னை விசாரணை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) **அ.சா.2 சாந்தமூர்த்தி (தலைமை காவலர்)** தனது சாட்சியத்தில் தான் தற்போது அ.பள்ளிப்பட்டி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 15.06.2024 ம் தேதி காலை 07.30 மணியளவில் தான் கடத்தூர் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது காவல் உதவி ஆய்வாளர் முகில்ராஜ் அவர்களது தலைமையில் தானும் தன்னுடன் அ.சா.1 ஆகியோருடன் காவல் உதவி ஆய்வாளர் கிடைத்த தகவலின்பேரில் மது விலக்கு குற்றம் சம்பந்தமாக கடத்தூர் to அரூர் செல்லும் சாலையில் மார்க்கமாக கடத்தூரிலிருந்து அரை கிலேமீட்டர் உள்ள ஜெயலட்சுமி பேன்சி ஸ்டோர் அருகில் கண்காணித்து கொண்டிருந்தபோது வழக்கின் எதிரிகளான ஆதவன், முத்தமிழ் ஆகியோர் சந்தேகப்படும்படி நின்றுக்கொண்டிருந்தார்கள் என்றும், அவர்களை சோதனை செய்தபோது அவர்கள் வைத்திருந்த பையில் 180 ML அளவு கொண்ட 8 PM – 14 பாட்டில்கள், Old Monk – 4 பாட்டில்கள், 175 ML Amret – 3 பாட்டில்கள், 1000 ML Old Admiral –3 பாட்டில்கள், 73 ML அளவு கொண்ட IB – 1 பாட்டில், கர்நாடகா மாநிலத்தை மதுபாட்டில்கள் இருந்தன என்றும், இது குறித்து காவல் உதவி ஆய்வாளர் எதிரிகளிடம் விசாரித்தபோது எதிரிகள் தங்களை கண்டவுடன் தப்பியோட முயன்றவரை போலிஸ் பார்டி உதவியுடன் சுற்றி வளைத்து பிடித்து விசாரித்தபோது அவர் அரசு மதுபானத்தை மொத்தமாக வாங்கி வந்து பொதுமக்களிடம் சில்லரையில் பாட்டில்களை அதிக விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததை ஒப்புக்கொண்டார் என்றும், எதிரிகளை காவல் உதவி ஆய்வாளர் அந்த இடத்திலேயே கைது செய்தார் என்றும், மேலும் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் தன்னுடன் வந்த அ.சா.1 முன்னிலையில் எதிரிகளிடம் இருந்து மேற்படி பாட்டில்களை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார் என்றும், கைப்பற்றுதல் மகஜரில் தானும் அ.சா.1 அவர்களும் கையொப்பம் செய்தோம் என்றும், தன்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி

கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் கைப்பற்றபட்ட வழக்கு சொத்துக்களை காவல் உதவி ஆய்வாளர் உயர் அதிகாரியின் உத்தரவின்பேரில் அந்த இடத்திலேயே கொட்டி அழித்தார் என்றும், பின்னர் எதிரிகளை நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்தார் என்றும், காவல் உதவி ஆய்வாளர் தன்னை விசாரணை செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்,

(iii) **அ.சா.3 நாவளவன் (சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்)** தனது சாட்சியத்தில் தான் தற்போது கடத்தூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடத்தூர் காவல் நிலைய குற்ற எண்.154/2024 சட்டப்பிரிவுகள் 4(1)(a) TNP Act புலன் விசாரணை அலுவலர்களான காவல் உதவி ஆய்வாளர் முகில்ராஜ் அவர்களது கையொப்பம் தனக்கு நன்கு பரிட்சையம் என்பதாலும் காவல் உதவி ஆய்வாளர் முகில்ராஜ் தற்போது பணிமாறுதலில் தென் மாவட்டத்திற்கு சென்றுவிட்டதாலும், தான் ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன் என்றும், கடந்த 15.06.2024 ம் தேதி காலை 07.30 மணியளவில் காவல் உதவி ஆய்வாளர் முகில்ராஜ் அவர்களது தலைமையில் காவல் உதவி ஆய்வாளரும் அவர்களுடன் அ.சா.1 மற்றும் அ.சா.2 ம் காவல் உதவி ஆய்வாளருக்கு கிடைத்த தகவலின்பேரில் மது விலக்கு குற்றம் தடுப்பு சம்பந்தமாக கடத்தூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கண்காணித்து கொண்டிருந்தபோது ஆஜர் எதிரிகள் ஆதவன், முத்தமிழ் முதல்வன் ஆகியோர் போலீசாராகிய காவல் உதவி ஆய்வாளர் மற்றும் அ.சா.1 மற்றும் அ.சா.2 கண்டவுடன் மறைய முற்பட்டுள்ளார்கள் என்றும், அவர்களை காவல் உதவி ஆய்வாளர் போலீஸ் பார்டி சகிதம் சந்தேகத்தின்பேரில் சோதனை செய்தபோது 180 ML அளவு கொண்ட 8 P.M 14 பாட்டில்கள், 500 ML அளவு கொண்ட Old Monk 4 பாட்டில்கள், 375 ML அளவு கொண்ட Amrut Rum – 3 பாட்டில்கள், 1000 ML அளவு கொண்ட Old Atmiral – 3 பாட்டில்கள், 750 ML அளவு கொண்ட IB –1 பாட்டில் மற்றும் கர்நாடகா மாநிலத்தை சேர்ந்த மதுபாட்டில்களும் இருந்தன என்றும், எதிரிகளிடம் இது பற்றி விசாரித்தபோது அரசு மதுபானத்தை மொத்தமாக வாங்கி வந்து பொதுமக்களுக்கு சில்லரையாக விற்பனை செய்வதற்காக வைத்திருந்ததாக ஒப்புக்கொண்டார்

என்றும், எதிரிகளை காவல் உதவி ஆய்வாளர் அந்த இடத்திலேயே கைது செய்தார் என்றும், மேலும் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் காவல் உதவி ஆய்வாளருடன் வந்த காவலர்கள் முன்னிலையில் எதிரிகளிடம் இருந்து மேற்கண்ட பொருட்களை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார் என்றும், கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், கைப்பற்றப்பட்ட மது பாட்டில்களை சம்பவயிடத்திலேயே காவல் உதவி ஆய்வாளர் உயர் அதிகாரியின் உத்தரவின்பேரில் அந்த இடத்திலேயே கொட்டி அழித்துள்ளார் என்றும், பின்னர் எதிரிகளை நிலையம் கொண்டு வந்து கடத்தூர் காவல் நிலைய குற்ற எண் 154/2024 சட்டபிரிவுகள் 4(1) (a) TNP ACT படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், பின்னர் எதிரிகளை நிலைய பிணையில் விடுவித்தார் என்றும், சாட்சிகள் 1 மற்றும் 2 ஐ தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், அத்துடன் காவல் உதவி ஆய்வாளர் புலன் விசாரணையை முடித்து 15.06.2024 ம் தேதி எதிரிகள் ஆதவன், முத்தமிழ் முதல்வன் ஆகியோர்களுக்கு எதிராக 4(1)(a) TNP ACT படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமான சாட்சிய விவரங்கள் குறித்து BNSS பிரிவு 351 (1) (b) –ன் படி வினவியபோது எதிரிகள் பொய்சாட்சி என்றும், இந்த வழக்கு பற்றி ஏதவாது சொல்லவேண்டுமா என்று வினவியபோது பொய் வழக்கு என்றும், அவர்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லையென்றும் கூறினார்கள்.

7. எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்கள் தங்களுடைய வாதத்தில் எதிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்றும், எதிரிகள் மீது பொய்யாக இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றும், அரசுத்தரப்பில் இந்த வழக்கு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லையென்றும், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து விடுதலை செய்யவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

**8. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றத்தை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதேயாகும்?**

**9. தீர்வு**

(i) இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தில் கடந்த 15.06.2024-ம் தேதி காலை 07.30 மணியளவில் காவல் உதவி ஆய்வாளர் நாவளவன் அவர்களது தலைமையில் கடத்தூர் – அரூர் செல்லும் சாலையில் மதுவிலக்கு ரோந்து பணி மேற்கொண்ட போது கடத்தூரிலிருந்து அரை கிலோமீட்டர் தொலைவிலுள்ள ஜெயலட்சுமி பேன்சி ஸ்டோர் அருகில் கண்காணித்துக்கொண்டிருந்தபோது இவ்வழக்கின் எதிரிகளான ஆதவன் மற்றும் முத்தமிழ் ஆகியோர்களை சந்தேகத்தின் பெயரில் சோதனை செய்தபோது அவர்கள் வைத்திருந்த பையில் 180 ML அளவு கொண்ட 8-PM-14 பாட்டில்கள், Old Monk 4, 175 ML Amrut Rum – 3 பாட்டில்கள், 1000 ML அளவு கொண்ட Old Admiral-3 பாட்டில்கள், 750 ML அளவு கொண்ட IB-1 கர்நாடகா மாநிலத்தை சேர்ந்த மது பாட்டில்களை வைத்திருந்தார்கள் என்றும், எதிரிகள் தங்களை கண்டவுடன் தப்பியோட முயன்றார் என்றும், எதிரிகளை போலிஸ் பார்டி உதவியுடன் சுற்றி வளைத்து பிடித்து விசாரித்தபோது அவர் அரசு மதுபானத்தை மொத்தமாக வாங்கி வந்து பொது மக்களிடம் சில்லரையில் பாட்டில்களை அதிக விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததை ஒப்புக்கொண்டார் என்றும், எதிரிகளை காவல் உதவி ஆய்வாளர் அந்த இடத்திலேயே கைது செய்தார் என்றும் கூறி சாட்சியமளித்துள்ளார்கள். மேலும் தங்களது குறுக்கு விசாரணையில் வாக்குமூலத்தை படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன் என்றும், சம்பவத்தன்று ரோல்கால் 8 மணியளவில் நடைப்பெற்றது என்றும், சம்பவயிடத்திற்கு சம்பவத்தன்று 8 மணியளவில் சென்றேன் என்றும், தாங்கள் ரோல் காலில் அன்றைய தினம் பங்கேற்கவில்லை என்றும், கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்கள் மூடிய நிலையில் இருந்தன என்றும், கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களை சம்பவயிடத்திலேயே காவல் ஆய்வாளர் வாய் மொழி உத்தரவின் பெயரில் கொட்டி அழித்துவிட்டோம் என்றும், பாட்டில்களை

மட்டும் காவல் நிலையம் கொண்டு வந்தோம் என்றும், கைப்பற்றுதல் மகஜர் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தோம் என்றும் கூறி சாட்சியமளித்துள்ளார்கள்.

(ii) இவ்வழக்கில் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ள நாவளவன் என்பவர் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி ஆவார். அ.சா.3 இவ்வழக்கில் தான் செய்த புலன் விசாரணையை அனுசரித்து சாட்சியம் அளித்துள்ளார். மேலும் தனது குறுக்கு விசாரணையில் தான் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி இல்லை என்றால் சரிதான் என்றும், தான் ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியமளிக்கிறேன் என்றும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

(iii) மேற்கண்ட அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்களின் சாட்சியங்களை கூர்ந்து கவனிக்கும் போது கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களை பரிசோதனைக்காக அனுப்பி அதற்கான ஆய்வறிக்கை எதுவும் பெறவில்லை என்பதும், கைப்பற்றுதல் மகஜர் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்பதும், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களை அழிப்பதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரியிடமிருந்து எழுத்து பூர்வமான உத்தரவு எதையும் பெறவில்லை என்பதும் மேற்கண்ட அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்களின் சாட்சியங்களின் மூலம் தெளிவாகிறது. எனவே எதிரிகள் எவ்வித அரசு அனுமதியோ உரிமமோ பெறாமல் மதுபாட்டில்களை கள்ளதனமாக விற்பதற்காக வைத்திருந்ததாக சொல்லப்படும் குற்றச்சாட்டை பொறுத்து அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

10.**இறுதியாக,** எதிரிகள் மீது சுமத்தப்பட்ட தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் பிரிவு 4(1)(a) ன் படியான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து, எதிரிகளை தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் பிரிவு 4(1)(a) ன் படியான குற்றச்சாட்டுக்களிலிருந்து இந்நீதிமன்றம் BNSS பிரிவு 271 (1) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறது.

11. இந்த வழக்கில் சொத்துக்கள் ஏதும் கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை எனவே சொத்துக்கள் குறித்து உத்தரவு எதுவும் இல்லை.

12. எதிரிகள் எழுதிக்கொடுத்துள்ள பிணை பத்திரத்தை மேல் முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 05 ம் தேதி அவையறிய பகரப்பட்டது.

I SAMBATH Digitally signed by I SAMBATH Date: 2026.06.05 17:11:02 +0530

**நீதித்துறை நடுவர்,**

**பாப்பிரெட்டிப்பட்டி.**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u> :**

அ.சா.1 – மூக்கன் (இரண்டாம் நிலை காவலர்)

அ.சா.2 – சாந்தமூர்த்தி (தலைமை காவலர்)

அ.சா.3 – நாவளவன் (சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்).

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u> :**

**<u>Judicial Form. 68</u>**

| Sl.No. | Description to the exhibits and its date | Date when the exhibit was filed in the case | How Marked | By whom filed | Remarks |
|---|---|---|---|---|---|
| 1) | கைப்பற்றுதல் மகஜர் | 08.05.2026 | அ.த.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2) | முதல் தகவல் அறிக்கை | 03.06.2026 | அ.த.சா.ஆ.1 | அ.சா.3 | அசல் |

**<u>அரசு தரப்பு சான்று பொருள்</u>:–** இல்லை

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்</u>:–** இல்லை

I SAMBATH Digitally signed by I SAMBATH Date: 2026.06.05 17:11:13 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பாப்பிரெட்டிப்பட்டி.**

**குறிப்பு** :

1. வழக்கின் முடிவு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. எந்த ஒரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைத்து விசாரிக்கப்படவில்லை.
3. வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தனர்.

.